முருகப்பெருமான் துணை

**உலக ஞானத் தலைவன் முருகப்பெருமான் அருளிய அருள்வாக்கு**

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1608

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**23.02.2024**, வெள்ளிக்கிழமை

1. ஓம் என்ற மகாசக்தியின் சூட்சுமமாகி
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற ஓங்காரஞானியே அரங்கா போற்றி
ஓங்காரன் சுப்ரமணியர் யானும் உந்தனுக்கு
ஓதிடுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 11 ம் நாள், 23.02.2024, வெள்ளிக்கிழமை)
2. இங்கனமே அரங்கன் தொண்டு வழி
இந்த உலகம் சரணாகதி கொண்டு வரும்காலம்
ஓங்கார நாதம் படி இனிதே
உலகமெல்லாம் மாற்றம் செய்ய இருக்க
3. இருக்கவே கலியுக மக்கள்
இனிதே அரங்கன் அவதார நோக்கம் அறிந்து
கருத்தாக ஓங்காரக்குடில் நோக்கி வந்து
கலியுகத்தில் அன்னதான சேவையில் பங்களித்து
4. பங்களித்து அரங்கன் வழி தர்மசாலைகள் துவக்கி
கலியுகத்தில் உலகோர் பசிபிணி விரட்டி வந்தால்
வந்திட தர்மபலம் எங்கும் கூடி
வையகத்தில் வடிவேலன் யான் இறங்க
5. சிந்தைபட யாவர்க்கும் தெளிவு கூடி
சித்திமிகு மாந்தர்களாக உலகோர் சிறந்து
சிறந்துமே அரங்கன் ஆசிவழி
செப்பிடுவேன் அனைவரும் அழியாமை பெற்று
6. சிறந்த ஞானவான்கள் சபை கூடுகின்ற
சித்திமிகு ஞான சபைதனை உருவாக்கி
உருவாக்கியே கலியுகத்தில் ஞானத்தலைவன் என்
உயர்வான ஆசிதனை பெற்றவர்க்கே

7. பெற்றவர்க்கே வருங்காலம் அரசியல் களமாக
பிசகின்றி ஆன்மீக ஞான வழி செயலுமாக
ஆகவே உலகமெல்லாம் நிரம்பி
அற்புதம் இந்த கலியுகம் காணக்கூடும்

8. கூடவே கலியுகத்தை மாற்றி
குறையிலா ஞான யுகமாக்கி
அழியாமை மிக்க அன்பர்கள் மூலம்
ஆட்சியையும் ஞான ஆட்சியாக உருவாக்குவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–